


கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் தயாரிப்பில் உருவான 'நம்பிக்கை தருகிறார் உதயநிதி' என்னும் புதிய பாடலை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., மாநில இளைஞரணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன், மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் மற்றும் கழக தோழர்கள் உடனிருந்தனர்.

### நடப்பு 2024 - 2025 ஆம் நிதியாண்டு முதல்

# தமிழ்நாட்டிற்கு கூடுதல் வரிப்பகிர்வு வழங்க வேண்டும்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.5-

தமிழ் நாட்டிற்கான நிதிப் பகிர்வை அதிகரிக்க வலியுறுத்தி வேலூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் மக்களவையில் விதி எண். 377 கீழ் ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்தார்.

அது வருமாறு :-

12வது நிதிக்குழு பரிந்துரைபடி தமிழ்நாட்டின் பங்கு 5.305 சதவீதமாக இருந்த வரிப் பகிர்வு 15வது நிதிக்குழுவில் 4.079 சதவீதமாக குறைந்துள்ளது.

2014-15 முதல் 2022-23 வரை தமிழ்நாட்டிற்கு மொத்த மத்திய பணப் பரிமாற்றம் ரூ. 4.75 லட்சம் கோடி ஆகும். அதே நேரத்தில் தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசுக்கு நேரடி வரியாக மட்டும் 6.35 லட்சம்



கோடி ரூபாய் செலுத்தியுள்ளது. மறைமுக வரிகளையும் கருத்தில் கொண்டால்> ஒன்றிய அரசுக்கு தமிழ் நாட்டில் இருந்து கிடைக்கும் ஒவ்வொரு 1 ரூபாய் பங்களிப்புக்கும் வெறும் 29 பைசா மட்டுமே தமிழகத்திற்கு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

30.06.2022 அன்று ஜிஎஸ்டி இழப்பீட்டு முறை நிறுத்தப்பட்டதால், தமிழ்நாடு அரசுக்கு ஆண்டுக்கு ரூ.20,000 கோடி வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

ஜிஎஸ்டிக்குப் பிறகு மாநிலங்கள் வருவாய் பற்றாக்குறையின் அழுத்தத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் வேளையில் செஸ் மற்றும் கூடுதல்வரி கட்டணங்களை விதிப்பதன் மூலம் ஒன்றிய அரசு தனது வருவாய் வசூலை வகுக்கக்கூடிய வரிகளிலிருந்து விலக்கிக்கொண்டே இருக்கிறது மாநில அரசின் நலன்களுக்கு புறம்பானது.

2022-23ல் ஒன்றிய அரசு கூடுதல் வரி (செஸ்) மற்றும் கூடுதல் கட்டணம் மூலம் 5.1 லட்சம் கோடிகள் ஈட்டியது. இந்த தொகையை ஒன்றிய அரசு மாநிலங்களுடன் பகிர்வதில்லை.

இதை மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்தால் தமிழகத்துக்கு ஓராண்டில் கூடுதலாக ரூ. 20,800 கோடி கிடைத்திருக்கும்.

எனவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு இந்த 2025 நிதி ஆண்டு முதல் தமிழகத்திற்கு கூடுதல் வரிப்பகிர்வு வழங்க ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு கதிர் ஆனந்த் கோரிக்கை விடுத்தார்.

### தருமபுரி காளிக்கரம்பு வனப்பகுதி

# மக்களுக்கு சாலை வசதி அமைத்திடுக!

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கோரிக்கை!

புதுடெல்லி, டிச. 5-

தருமபுரி மாவட்டம்,தருமபுரி ஒன்றியத்திற்கும்,பாப்பிரெட்டிப் பட்டி ஒன்றியத்திற்கும் இடையே கொண்டகரஹள்ளிஊராட்சியில் உள்ள காளிக்கரம்பு வனப்பகுதி வழியாக சாலை அமைத்து தரக் கோரி அப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.அதன்படிஅப்பகுதியில் சாலை அமைப்பது குறித்து தருமபுரி எம்.பி.ஆ.மணி நேரில் ஆய்வுமேற்கொண்டார்.

அதன் அடிப்படையில் நாடாளுமன்றத்தில்,இத்திட்டம் நிறைவேற்றப்பட் டால் பாப்பிரெட்டிப் பட்டி,மெனசி,பையர் நத்தம், மணலூர்,கொப்பக்கரை, துறிஞ்சிப்பட்டி, பொம்மிடி,போதகாடு,உள்ளிட்ட50கிராமங்களில் வாழும்மக்களின்பயணம்சுமார் 30 கி.மீ. வரை குறையும்.இதனால்அப்பகுதிமக்களின்வாழ்வாதாரம் மேம்படும்,இணைக்கப்படாதகிராமப்புறவாழ்விடங்களை சாலைவசதியுடன் இணைக்கும்



நோக்கில்செயல்படுத்தப்படுவதே பிரதமரின் கிராமப்புற சாலை திட்டம் எனவே காளிக்கரம்பு வனப்பகுதிவாழ்விடமக்களுக்கு சாலை வசதி அமைக்க ஏதுவாக பிரதமரின் கிராமப்புற சாலை திட்டத்தின் கீழ் ஒரு துணை திட்டத்தை உருவாக்கி அத்திட்டத்தினை நிறைவேற்றி தர வேண்டும்என்றுமத்தியகிராமப்புறவளர்ச்சிதுறைஅமைச்சர்சிவராஜ் சிங் சவுகானிடம் தருமபுரி நாடாளுமன்றஉறுப்பினர்வழக்கறிஞர்.ஆ.மணி கோரிக்கை விடுத்துள்ளார்.

### புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்!

*சென்னை, டிச. 5-*

*சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது*

*மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம் கன்னியம்மன் பேட்டை பகுதியை அமைந்துள்ள சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் பயிலுகின்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்றது.*

*வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமை தாங்கினார். மாவட்ட துணை செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன்,பகுதி கழக நிர்வாகிகள் கே. சிவசங்கரன், நா. மோகன் குமார், பா .சந்திரன், எஸ் கருணாகரன், 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார்,*

*வட்டக் கழக நிர்வாகிகள் இ அருள், இ. வெங்கடேசன், என். பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ் குமார் ,சி. முத்தையா,கே. ராஜ்மோகன்,வி. மாரி, சி. எம். ராஜா, ஆண்டார்குப்பம் ஆர். ராஜ்குமார், எலந்தனூர்வி. சிவப்பிரகாஷ், காமராஜ்புரம் எம். கிருபாகரன், குளக்கரை மஞ்சுநாதன், ரிஷி குமார், கடப்பாக்கம் நாகலிங்கம், சடையங்குப்பம் நைனியப்பன், பர்மா நகர் வக்கீல் சுரேந்தர், வடபெரும்பாக்கம் வக்கீல் எம். என். தளபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு பள்ளி மாணவ மாணவிகளுடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டி அனைத்து குழந்தைகளுக்கும் ஊட்டி மகிழ்ந்தார்.*

*பின்னர் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் புத்தகப்பை, நோட்டு, புத்தகம் ,பென்சில் பேனா ரப்பர் அடங்கிய பெட்டகம், சாக்லேட் ஆகியவற்றை வழங்கி வாழ்த்தினார்.*

*முன்னதாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி குழந்தைகள் பிறந்தநாள் வாழ்த்து பாடல் பாடி மகிழ்ந்தார்கள். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.*



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், ஆரணி பேரூரில் மாவட்டப் பொறியாளர் அணி சாரிபில் மாவட்ட அமைப்பாளர் ஆரணி எஸ்.ரோஸ் பொன்னையன் ஏற்பாட்டில் பேரூர் செயலாளர் பி.முத்து தலைமை தாங்கிட, நா.செல்வசேகரன், மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், ஜெ.மூர்த்தி, கதிரவன், எஸ்.இரமேஷ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி, ஏ.வி. இராமமூர்த்தி, பி.வெங்கடாசலபதி, கன்னிகை ஸ்டாலின், மு.மணிபாலன், ஆ.சக்திவேல், பொன்னேரி ரவிக்குமார், ஜி.பி. வெங்கடேசன், டி.கண்ணதாசன், ஜி.கரிகாலன், நீலகண்டன்,. டி.கோபிநாத் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் வி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. கழக் கொடியேற்றி, தூய்மைப் பணியாளர்களுக்கு உடைகள் மற்றும் பொதுமக்கள் 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். டி.எஸ்.குரவப்பா, தமிழ் அழகன், ஜெயக்குமார், என்.ரஹ்மான்கான், ஆர்.சுபாஷினி ரவி, எல்.உதயகுமார், கே.நாகராஜ், மகேந்திரன், சாய்சத்யா, கே.சூரியா, எஸ்.பிரபுகுமார், புதுநகர் பாலாஜி, கே.கவியரசு, டி.சுந்தர், டி.சத்யநாராயணன், எஸ். நாகராஜ் எம்.சுல்தான், டி.பாஸ்கர், ஜி.சந்தோஷ், டி.தமிழ்செல்வன், ஆர்.வசந்தகுமார், விமல்ராஜ், எஸ்.பி.உமாபதி, ஜி.பாஸ்கர், முஸ்தபா மூனின், ஈசா ஜாவித் மோ.பிரசாத், துளசிராமன் ஆகியோர் நன்றி கூறினார்.



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் (எளியோர் எழுச்சி நாள்) விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.சங்கர் கணேஷ் எம்.சி., ஏற்பாட்டில்,151வது வார்டு அரசு மகப்பேறு மருத்துவமனையில் பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா ஆகியோர் 27-11-2024 அன்று பிறந்த ஏழு குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து, பரிசு பெட்டகம் வழங்கி, 147 கழகத் தோழர்கள் அரசு மருத்துவமனைக்கு உடல் உறுப்பு தானம் வழங்கும் நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தனர்.உடன் மதுரவாயில் வடக்கு பகுதி கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி,எஸ். அருணாசலம், வ.செல்வக்குமார் எம். சி,செ.இரவி,பி.எம். செல்வராஜ், இரா.பால்பாண்டியன், அ.பாரதி எம்.சி.,கே. ராஜ்6 எம்.சி.,அ. மோசஸ்,சி.சுந்தர்,அ. ராதா செல்வம்,செல்வி ரமேஷ்,சாந்தி ராமலிங்கம், விமலாசேகர்,மோ. சுந்தர்,பி.கே. சண்முகம்,ப.ரகு,என். துரை,இரா.ராஜேஷ், சூசைராஜ், அன்புச்செல்வி உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

### கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியம்!

# ஒன்றிய அரசினரால் உரிய திட்டங்களுக்காக நிர்வகிக்கப்படுகிறதா?

## மக்களவையில் - டாக்டர் எஸ்.ஜெகத்ரட்கன் கேள்வி!

புதுடெல்லி, டிச.5-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்கன் 02.12.2024 அன்று மக்களவையில், கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியம், ஒன்றிய அரசின் திட்டங்களுக்காக உரிய முறையில் செலவழிக்கப்படுகிறதா என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா என்றும் ஒன்றிய அரசின் கூட்டாண்மை விவகாரங்கள் துறை இணையமைச்சர் ஹர்ஷ் மல்ஹோரித்ராவிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் கூட்டாண்மை விவகாரங்கள் துறை இணையமைச்சர் அளித்த பதில் வருமாறு :

பிரிவு 135, கம்பெனிகள் சட்டம் 2013ன் படி, ஐந்து கோடிக்கும்



மேல் இலாபம் ஈட்டும் கூட்டாண்மை நிறுவனங்கள், இலாபத்திலிருந்து குறைந்த பட்சம் இரண்டு சதவீதம் அளவிற்காவது, கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியமாக, நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகவும், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பாது காப்பதற்காகவும், சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்காகவும் கட்டாயமாக செலவழிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசு திட்டம் தீட்டியுள்ளது.

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது, காட்டு வளங்களைப் பாதுகாப்பது. கால்நடைகள் நலத் திட்டங்கள், ஆறுகளை சுத்தப்படுத்துவது போன்ற திட்டங்களுக்காக கூட்டாண்மை நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் செலவிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும், ஒன்றிய அரசு, மாநில அரசுகளால் நிர்வகிக்கப்படும் ஆராய்ச்சித் திட்டங்களையும் பல்கலைக் கழகங்களால் நடத்தப்படும் ஆராய்ச்சிகளுக்காகவும், மேலும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி குழுமம், அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி குழுமம் ஆகிய அமைப்புகளால் நிறைவேற்றப்படும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க திட்டங்களுக்காகவும் கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியம் செலவிடப்படுவதை ஒன்றிய அரசு கட்டாயமாக்கியுள்ளது என்றும், இதற்காக, ஒவ்வொரு நிறுவனத்திலும் கூட்டாண்மை சமூக நிதி பொறுப்பு குழுக்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன என்றும் அந்த குழுக்கள், இந்த பொறுப்பை திறம்பட நிர்வகித்து வருகின்றன.

இவ்வாறு இணையமைச்சர் ஹர்ஷ் மல்ஹோர்தரா அவர்கள் பதிலை அளித்துள்ளளார்.

### நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் பங்கு மார்க்கெட்டில் ஏற்பட்ட திடீர் ஏற்ற, இறக்கம்:

# ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி!

புதுடெல்லி, டிச. 4-

கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தல் முடிந்த சமயத்தில் பங்கு மார்க்கெட் வர்த்தகத்தில் ஏற்பட்ட திடீர் வீழ்ச்சியால் முதலீட்டாளர்களுக்கு பல லட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது உண்மையா? அது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டதா? எல்.ஐ.சி. மற்றும் பொதுத்துறை வங்கிகள் பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்துள்ள பணம் எவ்வளவு என்று மாநிலங்களவையில்தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு ஒன்றிய நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சவுத்ரி அளித்த பதில்:

உலக அளவிலான பொருளாதார சூழல், அதனால் வெளிநாட்டிலிருந்து செய்யப்படும் முதலீட்டில் ஏற்படும் தாக்கம், உள்நாட்டு பொருளாதார சூழல் மற்றும் பெரும் நிறுவனங்களின் ஒட்டு



மொத்த செயல்பாடு ஆகியவை தான் பங்கு வர்த்தகத்தில் ஏற்ற இறக்கங்களைத் தீர்மானிக் கும் முக்கிய காரணிகள்.

சென்செக்ஸ் மற்றும் நிப்டி 50 ஆகிய இரண்டு குறியீடுகள்தான் பங்கு வர்த்தகத்தின் போக்கை உணர்த்தும். 2024 நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் கடந்த மார்ச் 16ம் தேதி அறிவிக்கப்பட்டதில் இருந்து ஜீன் 3 ம் தேதி வரை சென்செக்ஸ் 5.3 % நிப்டி 5.6 % உயர்வு கண்டன. ஜூன் 4ம் தேதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளில் சென்செக்ஸ் 5.7 %; நிப்டி 5.9% குறைந்தன.

ஆனால் அடுத்த மூன்றே நாட்களில் அதுவரை இல்லாத அளவுக்கு சென்செக்ஸ் 11.3 % ; நிப்டி 10.9 % உயர்ந்து. அடுத்த இரண்டு நாட்களையும் சேர்த்து மொத்தம் ஐந்தே நாட்களில் பங்கு மார்க்கெட்டில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் சரிவிலிருந்து முழுமையாக மீண்டு, தங்களது மதிப்பில் 50 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்வைக் கண்டன.

இந்த ஏற்ற இறக்கங்கள் குறித்து பங்கு வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் செபி அமைப்பு கவனத்தில் கொண்டதே தவிர, இதில் முறைகேடு நடந்ததாக எந்தப் புகாரும் செபியின் கவனத்திற்கு வரவில்லை.

பொதுவாகவே, பங்கு வர்த்தகத்தில் தொடர்ச்சியான கண்காணிப்பை செபி செலுத்தி வருகிறது. ஏதேனும் முறைகேடு கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்க அந்த அமைப்புக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பொதுத்துறை நிறுவனமான எல்.ஐ.சி., மார்ச் 2024 நிலவரப்படி 7.42 லட்சம் கோடி ரூபாய் பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்துள்ளது. அதன் தற்போதைய மார்க்கெட் மதிப்பு 14.58 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.

பொதுத்துறை வங்கிகளைப் பொறுத்தமட்டில் நவம்பர் 2024 நிலவரப்படி, பாரத ஸ்டேட் வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி உட்பட 12 வங்கிகள் பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்துள்ளன. அதிகபட்சமாக பாரத ஸ்டேட் வங்கி 15,257 கோடியும், குறைந்த பட்சமாக பஞ்சாப் & சிந்த் வங்கி 22 கோடி ரூபாயும் முதலீடு செய்துள்ளன.

இவ்வாறு அமைச்சர் பங்கஜ் சவுத்ரி பதிலளித்தார்.

### போலியான கணக்குகளை சரிபார்க்க வேண்டும்!

# வங்கிச் சேவையில் முறையான சட்டத்திருத்தம் கொண்டு வர வேண்டும்!

## மக்களவையில் - கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.5-

போலியான வங்கிக் கணக்குகளை சரிபார்த்து, வங்கிச் சேவையில் முறையான சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று மக்களவையில் ஈரோடு தொகுதி கழக உறுப்பினர் கே.இ.பிரகாஷ் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் பேசியது வருமாறு :-

வங்கி திருத்தச் சட்ட மசோதாவின் உரை (2024)-03.12.2024 State Bank of India (SBI) தோராயமாக 40,000 MULE கணக்குகளை அடையாளம் கொண்டுள்ளது. அதனுடைய போலி கணக்குகள் வாயிலாக, அதேபோல் பஞ்சாப் நேஷனல் வங்கியில் 10,000 கணக்குகளும் மற்றும் கனரா வங்கியில் 7000 கணக்குகளும் இந்த முறைப்படி மோசடியில் உள்ள கணக்குகள் ஆக தரவுகள் கூறப்படுகிறது. அதேபோல் மகேந்திரா வங்கியிலும் சுமார் 6000 அக்கவுண்ட் போலியாக உள்ளது.

அதே போல் AXIS பேங்கில் உள்ள என்னுடைய அக்கவுண்டில் உள்ள கணக்குகளில், நான் தமிழ்நாட்டில் எம்.பி ஆக உள்ளேன் மற்றும் தமிழ்நாட்டில் இருந்து வந்த மேடம் தான் ஒன்றிய நிதி அமைச்சராக இருக்கிறார்கள். என்னுடைய சொந்த அக்கவுண்டில் 10,620 எடுக்கப்பட்டுள்ளது. மினிமம் பேலன்ஸ் இருந்த போதிலும் இந்த தொகை எடுக்கப்பட்டுள்ளது. இதுபோல் பல லட்சக் கணக்கான அக்கவுண்டுகள் வைத்திருக்கும் நம் நாட்டில் இவ்வாறு முறைகேடு நடந்து கொண்டிருக்கிறது.

ஒரு எம்.பி உடைய அக்கவுண்டிலேயே இது போன்று முறைகேடு நடந்திருக்கிறது என்றால் சாமானிய மக்களின் நிலையை என்னவென்று கூறுவது? கொள்ளையடிப்பதற்கு ஒரு ஆதாரமாக இதையே கூற முடியும்.

அதேபோல் ஏடிஎம் பரிவர்த்தனை மூலமாகவும் மினிமம் பேலன்ஸ் பிரச்சினை மூலமாகவும் எடுக்கப்பட்ட தொகை 35,587 கோடி ரூபாய் இந்த ஆண்டு மட்டும் எடுக்கப்பட்டுள்ளது.

இதுபோல் பல போலியான அக்கவுண்டுகள் அனைத்தையும் நீங்கள் சரி பார்க்க வேண்டும் என்று கோரிக்கையாக வைக்கிறேன்.

அதேபோல் வழக்குகளில் உள்ள அக்கவுண்டுகள் 13,564 வழக்குகள் அக்கவுண்டாக இருக்கிறது. அதுமட்டுமின்றி இந்த ஆண்டு மட்டும் 70% அக்கவுண்ட் மோசமான சூழ்நிலையில் உள்ளன.

அதேபோல் அவசர கவனம் தேவைப்படும் வங்கி அமைப்பில் உள்ள ஒரு முக்கியமான குறைபாட்டை எடுத்துக்காட்டுகிறது.

அது என்னவென்றால் KYC நடைமுறையை ரொம்ப ஸ்ட்ராங்காக கொண்டு வந்து இந்த முறைகேடான அக்கவுண்டை நீக்க வேண்டும்.

அதே போல எங்களைப் போல ஒரு எம்.பியாக உள்ளவர்களுக்கு இது போன்று நடக்கிறது



என்றால் குடிமக்களுடைய பாதிப்பை நீங்கள் கண்டிப்பாக உணர வேண்டும். உதாரணத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 1000 ரூபாய் வங்கியில் செலுத்திக் கொண்டிருக்கிறார். அந்த ஆயிரம் ரூபாயை கூட எடுக்க முடியாத நிலைமை தான் மக்களுக்கு உள்ளது. இது போன்ற பிரச்சினையை பலர் சந்தித்து வருகின்றனர்.

இதுபோல் ஒவ்வொரு குடிமக்களுடைய வங்கி கணக்களிலும் இருந்து நாம் கொள்ளை அடிக்கப்படுவதாக நினைக்கப் படுகின்ற தொகை அனைத்தும் திரும்ப செலுத்தப்பட வேண்டும்.

இதனுடைய கணக்குகள் அனைத்தும் கண்டிப்பாக தரவு செய்யப்பட வேண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு அக்கவுண்டிலும் 1000 ரூபாய் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். மினிமம் பேலன்ஸ் மெயின்டெயின் பண்ணவில்லை என்று அந்த தொகையையும் ஒன்றிய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான திட்டமான பெண்கள் உரிமை தொகை திட்டத்தின் மூலம் செலுத்தப்படுகின்ற 1000 ரூபாயை ஒன்றிய அரசு நூதன முறையில் எடுத்துக் கொண்டிருக்கிறது. வங்கிச் சேவையில் நீங்கள் சட்டதிருத்தம் கொண்டு வர வேண்டும் என்று தமிழ்நாட்டை சேர்ந்த ஒன்றிய நிதி அமைச்சரை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் பேசினார்.


**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி-2 | 178 | 1 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/5316/ஒப்பந்தப்புள்ளி/2024


### சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமை! நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலை!

# பி.ஆர். அம்பேத்கர் நினைவு தினம்!

## 121 'அ' வட்ட கழகத்தில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

*சென்னை, டிச. 5-*

*இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய, பி. ஆர்.அம்பேத்கர் 68 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121 அ வட்ட தி.மு.கழகத்தின் சார்பில், நாளை 6.12.2024 வெள்ளிக்கிழமை லாயிட்ஸ் சாலை 121 'அ' வட்ட கழக அலுவகத்தில், வட்ட செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி மதி எம்.சி. முன்னிலையில், மாவட்ட செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம். எல்.ஏ. பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்.*

*121 'அ' வட்ட திமு கழகத்தின் சார்பில், ஏற்பாடு செய்து இருக்கும் இந்நிகழ்ச்சியில், மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், 121 அ வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.2 / பி.எல்.சி. நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.*





மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 16 வது வட்டம் கன்னியம்மன் பேட்டை பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை 16வது வட்டச் செயலாளர் இ கண்ணப்பன் தலைமையில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம். எல்.ஏ. வழங்கினார். அறிவழகி பாலகிருஷ்ணன், சிவசங்கரன், மோகன் குமார், சந்திரன், தரணி, கருணாகரன், கே. கருணாகரன், எஸ். சிவகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.